NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 24 October 2017

# சூரியசக்தி உற்பத்தியை ஆய்வு செய்ய $6.2 மில்லியன் நிதி

சிங்கப்பூரில் சூரியசக்தி உற்பத்தியின் அளவை முன்னுரைக்கும் ஆற்றலை மேம்படுத்துவதற்காக $6.2 மில்லியன் ஆய்வுத் தொகையை எரிசக்தி சந்தை ஆணையம் ஆய்வாளர் குழுமம் ஒன்றுக்கு வழங்கி உள்ளது.

இந்தத் திட்டத்தால் சிங்கப்பூரின் மின்சார விநியோக அமைப்பின் இருப்பிற்கும் தேவைகளுக்கும் சரிவர திட்டமிட வழிவகுக்கும்.

ஆய்வாளர் குழுமம் சிங்கப்பூர்த் தேசிய பல்கலைக்கழகத்தின் தலைமையில் இயங்கும். சிங்கப்பூர் அனைத்துலக எரிசக்தி வாரத்தின் தொடக்கவிழாவில் நேற்று வர்த்தக, தொழில் மூத்த துணை அமைச்சர் சிம் ஆன் இந்தக் குழுமத்தைத் தொடங்கி வைத்தார்.

எரிசக்தி சேமிப்பு ஆற்றலை மேம்படுத்துவதற்கான சோதனைக் கூடத்தை அமைப்பதற்கான $17.8 மில்லியன் மானியத்தையும் மரினா பே சேண்ட்ஸின் கண்காட்சி, மாநாட்டு மையத்தில் நேற்று நடந்த நிகழ்ச்சியில் அவர் அறிவித்தார்.

'சிடபிள்யு' குழுமமும் 'ரெட் டாட் பவர்' நிறுவனமும் இரு ஆய்வாளர் குழுமத்தை வழிநடத்தி எரிசக்தி சேமிப்பு அமைப்பை உருவாக்கும்.

இத்தகைய அமைப்பு எரிசக்தி கையிருப்பை வழங்கியும் உச்சநேர தேவையைக் குறைத்தும் சூரிய சக்தி சேமிப்பிற்கு ஆதரவளிக்கும் என்று எஸ்பி குழுமத்தோடு இணைந்து ஆய்வு மானியத்தை வழங்கிய எரிசக்தி சந்தை ஆணையம் கூறியுள்ளது.

சோதனைக் கூடத்தை அமைத்து அதிலிருந்து கற்றுக் கொள்ளப்படும் நுண்ணறிவு சிங்கப்பூரில் பெரிய அளவில் எரிசக்தி சேமிப்பு அமைப்பைப் பயன்படுத்துவதற்கான தரத்தையும் கொள்கைகளையும் வகுக்க வழி செய்யும் என்று திருவாட்டி சிம் ஆன் தெரிவித்தார்.

குடிமக்கள் தேவைக்கு அதிகமான சூரியசக்தியை மீண்டும் மின்சார விநியோக அமைப்பிற்கு அடுத்த ஏப்ரல் முதல் விற்பனை செய்வதற்கு வழி செய்யும் விரிவுபடுத்தப்பட்ட திட்டம் பற்றியும் திருவாட்டி சிம் ஆன் விளக்கினார்.

ஜூரோங் வட்டாரத்தில் குடியிருக்கும் மக்களே இந்தப் புதிய திட்டத்தால் முதலில் பயன்பெறுவர். பற்பல மின்சார விநியோகிப்பாளர்களில் தங்களுக்கு விருப்பப்பட்ட ஒன்றை தேர்வு செய்யும் திறந்த எரிசக்தி சந்தைக்கு ஜூரோங் குடியிருப்பாளர்கள் அறிமுகப்படுத்தப்படுவார்கள்.

சிங்கப்பூர் தீவிரமாக சூரிய சக்தி பயன்பாட்டை நோக்கிச் செல்கிறது என்று சிங்கப்பூர் எரிசக்தி விரிவுரை நிகழ்த்திய துணைப் பிரதமரும் தேசிய பாதுகாப்பு ஒருங்கிணைப்பு அமைச்சருமான டியோ சீ ஹியன், கேள்வி பதில் அங்கத்தின்போது கூறினார்.

2%க்கும் குறைவாகவே சூரிய சக்தியைத் தயாரிக்கும் சிங்கப்பூர், 20% வரை அதை உயர்த்தமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.